## (ஏ) வேலை நிலையும் தொழில் உறவுகளும்

**வேலை**

செம்மையாக நிறுவப்பட்ட தொழிற் சந்தை இல்லாத இலங்கை போன்ற நாட்டில் நிலவும் வேலைநிலை, வேலையற்றநிலை ஆகியன சம்பந்தமான விபரங்களைப் பரந்த அளவைகளின் மூலமாகவன்றி வேறு வழிகளாற் பெறமுடியாது. அப்படியான ஓர் அளவை வேலைநிலையின் சகல அம்சங்களைப் பற்றியுமான விபரங்களைத் திரட்டுவதற்கென 1959/60 இல் நடாத்தப்பட்டது. 1963இல் நடாத்தப்பட்ட 'இலங்கை நுகர்வோர் நிதி அளவை,' வேறு தேவைகளை முக்கியமாகக் கொண்டு நடாத்தப்பட்டதெனினும் இவ்விடயம் பற்றியும் குறிப்பிடத்தக்க விபரங்களைத் தந்துள்ளது. பின் 1964 ஆம் ஆண்டில் சர்வதேச தொழில் நிறுவனத்தின் நிபுணர் ஒருவரால் கிராமியப்பகுதிகளிலுள்ள வேலைநிலை, வேலையற்றநிலை சம்பந்தமான பிரச்சினைகளை அறிவதற்காகப் 13 கிராமங்களைத் தழுவிய மாதிரி அளவையின் அறிக்கையும் உண்டு. இந்த அளவைக்கு எடுக்கப்பட்ட மாதிரிக்காட்டிகள் அங்கொன்று இங்கொன்றாக எடுக்கப்படாதமையாலும், ஒரு பக்கமானதாய் அமையத்தக்கமையாலும் அதிலிருந்து பெறப்பட்ட விபரங்களை உபயோகிப்பதிற் கவனமாக இருத்தல் வேண்டும். 1959/60 ஆம் ஆண்டின் அளவையின்படி இலங்கையிலுள்ள வேலையற்றோரின் மொத்த எண்ணிக்கை 340,000 ஆகும். 1963 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவையின்படி வேலையற்றோரின் எண்ணிக்கை 458,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழிற் திணைக்களத்தால் இலங்கைத் 'தொழில் வர்த்தமானி'யில் பிரசுரிக்கப்பட்ட வேலையற்றோரின் மாதாந்த எண்தொகைகள், தொழில் இணைப்பு அலுவலகங்களிற் தொழில்நாடிப் பதிவுபட்டோரினதும், சிறந்த தொழில்வேண்டிப் பதிவுபட்டோரினதும் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கின்றன. இவ் எண்தொகைகள் இலங்கையிலுள்ள வேலையற்றோரின் மொத்தத் தொகைகளைத் தரக்கூடியனவல்ல ஆயினும், பரந்த காலப் பகுதியிற் காணப்பட்ட போக்கைப் பொதுவாகப் புலப்படுத்துகின்றன.

1965 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தொழில் நாடிப் பதிவுபட்டோரின் எண்ணிக்கை துரிதமாக அதிகரிக்கத் தொடங்கிற்று. இப்போக்கு 1966 ஆம் ஆண்டின் முதற் காற் பகுதியின் முடிவுவரை தொடர்ந்து காணப்பட்டது. இரண்டாம் காற்பகுதியில் ஓர் அசைவற்ற தன்மை நிலவியதெனினும் மூன்றாம்காற் பகுதியில் அது மறுபடியும் துரிதமாக அதிகரித்தது. இறுதியில், இவ்வாண்டின் கடைக்காற் பகுதியிலுள்ள எண்தொகைகள் சிறிது வீழ்ச்சியடைந்தன.

தொழில்நாடிப் பதிவுபட்டோரின் எண்ணிக்கை 1965ஆம் ஆண்டில் 20 சத வீதத்தால் அதிகரித்ததற்கெதிராக, 1966 ஆம் ஆண்டில் 19 சத வீதத்தால் உயர்வுற்றது. இதற்கு ஒப்பியல்பாக, 1964ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 7 சதவீதமாகும். 1966 ஆம் ஆண்டு பல்வேறு பகுப்புக்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கையில் ஓரளவு தேர்ச்சி பெற்றோரின் தொகை 23 சதவீதத்தாலும், தேர்ச்சியற்றோரின் தொகை 21 சத வீதத்தாலும், தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர் இலிகிதர்களின் தொகை 19 சதவீதத்தாலும், தேர்ச்சி பெற்றோரின் தொகை 8 சத வீதத்தாலும் அதிகரித்து விளங்கின. இவை சம்பந்தமாக 1965 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பிடத்தக்க வீத அதிகரிப்புகள் முறையே, 27 சதவீதமாகவும், 10 சதவீதமாகவும், 34 சதவீதமாகவும், 12 சதவீதமாகவும் உள்ளன.

தொழில் இணைப்பு அலுவலகங்களால் அண்மை வருடங்களில் வேலையில் அமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அட்டவணை 11 (ஏ) 1இல் காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஏ) 1

### தொகுதிவாரியாக, வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும், பதிவுசெய்தோரின் மொத்த எண்ணிக்கையில் இவர்களின் சதவீதமும்

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்றோர் | % | அரைத் தேர்ச்சி பெற்றோர் | % | தேர்ச்சி பெறுதோர் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1956 | 1,913 | 11·9 | 845 | 8·6 | 1,565 | 6·1 | 4,162 | 12·1 | 8,485 | 9·9 |
| 1957 | 1,176 | 6·3 | 709 | 5·3 | 1,180 | 3·8 | 3,053 | 6·4 | 6,118 | 5·5 |
| 1958 | 1,827 | 9·2 | 800 | 5·9 | 1,006 | 3·1 | 2,251 | 4·4 | 5,884 | 5·0 |
| 1959 | 1,667 | 8·0 | 1,045 | 7·5 | 1,275 | 3·8 | 3 218 | 5·4 | 7,205 | 5·6 |
| 1960 | 1,400 | 5·3 | 771 | 4·6 | 1,247 | 3·6 | 4,744 | 6·5 | 8,162 | 5·4 |
| 1961 | 1,259 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2,794 | 3·9 | 5,648 | 3·7 |
| 1962 | 1,263 | 3·7 | 468 | 2·7 | 809 | 2·3 | 2,315 | 3·5 | 4,857 | 3·2 |
| 1963 | 1,322 | 3·7 | 502 | 3·0 | 836 | 2·8 | 2,466 | 3·9 | 5,129 | 3·4 |
| 1964 | 1,722 | 4·4 | 535 | 3·1 | 945 | 2·5 | 3,599 | 5 5 | 6,801 | 4·3 |
| 1965 | 1,495 | 2·7 | 846 | 4·2 | 1,035 | 2·1 | 3,753 | 5·0 | 7,129 | 3·6 |
| 1966* | 1,048 | 1·6 | 749 | 3·5 | 910 | 1·5 | 4,149 | 4·6 | 6,856 | 2·9 |

மூலம் : தொழிற்றிணைக்களம்.

* தற்காலிகமானவை

**அரசாங்கத்துறையின் வேலைநிலை**

அரசாங்கத்துறையிலுள்ள வேலைநிலையில் ஏற்பட்டமாற்றங்கள் சம்பந்தமாக 1965ஆம் ஆண்டில் மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட விசாரணை 1966 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடாத்தப்பட்டது. சகல அரசாங்கத் திணைக்களங்களிடமிருந்தும், ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களிலிருந்தும், மத்திய வங்கி விபரங்கள் கோரியதற்குப் பதிலாக அரசாங்கத் திணைக்களங்களில் 58 சதவீதமானவற்றிலிருந்தும், ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களில் 56 சத வீதமானவற்றிலிருந்தும் தரவுகளைப் பெறமுடிந்தது. ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்கள் என்பதில் அரசாங்க கூட்டுத்தாபனங்களும், பல்கலைக் கழகம், மத்திய வங்கி போன்ற நிலையங்களும் உட்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் விசாரணைக்குப் பதில் அளித்த 45 அரசாங்கத் திணைக்களங்களில் 1966 ஆம் ஆண்டின் முடிவிற் தொழில் பார்க்கும் மொத்த ஊழியர்களில் 67 சதவீதமானோர் நிரந்தரமாகவும், 10 சதவீதமானோர் தற்காலிகமாகவும், 23 சதவீதமானோர் நாட்கூலி பெறுபவர்களாகவும் இருந்தனர். இந்த 45 திணைக்களங்களுக்குமான 1965ஆம் ஆண்டின் முடிவிற்குரிய ஒப்பியல்பான வீதத் தொகைகள் முறையே 69 சதவீதமாகவும், 11 சதவீதமாகவும், 20 சதவீதமாகவும் உள்ளன. மொத்த வேலைநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை அளவிடுவதற்பொருட்டு, 1966 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வேலையில் இருந்தோரின் எண்ணிக்கையையும் அவ் ஆண்டின் இறுதியில் வேலையில் இருந்தோரின் எண்ணிக்கையையும் ஒப்பிடுகையில், அரசாங்கத் திணைக்களங்களில் நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் வேலையில் இருந்தோரின் எண்ணிக்கை 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் விசாரணைக்குப் பதிலளித்த 25 ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களிற் தொழில்பார்க்கும் மொத்த ஊழியர்களில் 82 சதவீதமானோர் நிரந்தரமாகவும், 2 சதவீதமானோர் தற்காலிகமாகவும், 16 சதவீதமானோர் நாட்கூலி பெறுபவர்களாகவும் இருந்தனர். இவற்றிற்கு ஒப்பியல்பாக, 1965ஆம் ஆண்டின் முடிவிற்குரிய விபரங்கள் முறையே 86 சதவீதமாகவும், 3 சதவீதமாகவும், 11 சதவீதமாகவும் உள்ளன. ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களில் நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் வேலையில் இருந்தோரின் எண்ணிக்கை 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென கிடைத்துள்ள விபரங்கள் தெரிவிக்கின்றன.

**தொழில் உறவுகள்**

வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையும், வேலை நிறுத்தங்களின் விளைவாக இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்களின் எண்ணிக்கையும், 1965 ஆம், 1966 ஆம் ஆண்டுகளிற் கூர்மையாக வீழ்ச்சியுற்றன. உதாரணமாக வேலைநிறுத்தங்களின் விளைவாக 1965 ஆம் ஆண்டில் இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் 1964 ஆம் ஆண்டிலும்பார்க்க 35 சதவீதத்தால் குறைவுற்றும், 1966 ஆம் ஆண்டில் (தற்காலிகமான விபரங்களின்) இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் 1965ஆம் ஆண்டிலும்பார்க்க 67 சதவீதத்தாற் குறைவுற்றும் இருந்தன.

தோட்டத்துறையில் 1966 ஆம் ஆண்டில் இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்களின் எண்ணிக்கை, 1955 ஆம் ஆண்டின் பின்னுள்ள எந்த வருடத்திலும் காணப்படாத ஆகக் குறைந்த அளவுடையதாகவும், சென்ற பத்தாண்டு காலத்தில் இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்களின் வருடாந்தச் சராசரியிலும் பார்க்க 57 சதவீதம் குறைவுடையதாகவும் இருந்தது. தோட்டங்களல்லாத துறையில் இவ்வீழ்ச்சி இன்னும் பிரமாண்டமானதாகவும், சென்ற பத்தாண்டுச் சராசரியிலும்பார்க்க 90 சதவீதம் குறைவுடையதாகவும் காணப்பட்டது.

அட்டவணை 11 (ஏ) 2 இல் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையும், அவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும், அதன் பயனாக இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்களும் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஏ) 2**

**வேலை நிறுத்தங்கள்**

| வருடம் | பெருந் தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் |
| 1956 | 99 | 56,908 | 200,888 | 115 | 31,852 | 152,966 |
| 1957 | 177 | 297,061 | 618,050 | 127 | 70,239 | 190,448 |
| 1958 | 123 | 39,372 | 840,632 | 96 | 42,713 | 399;228 |
| 1959 | 177 | 47,318 | 352,095 | 71 | 42,453 | 460,141 |
| 1960 | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139½ |
| 1961 | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170,372 |
| 1962 | 138 | 42,569 | 193,792 | 50 | 25,730 | 801,882 |
| 1963 | 174 | 62,511 | 359,905 | 58 | 29,819 | 479,678 |
| 1964 | 201 | 68,009 | 611,060 | 103 | 21,400 | 274,623 |
| 1965 | 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966* | 117 | 35,944 | 159,327 | 32 | 4,007 | 29,571 |

மூலம் : தொழிற்திணைக்களம்.

* தற்காலிகமானவை

வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களின் ஒப்பியல்பான முக்கியத்துவம் கடந்த ஆண்டுகளில் ஒரே விதமுடையனவாய் அமைந்திருந்தன. முந்தைய வருடங்களைப் போலவே, முக்கியமான காரணங்களாக 1966 ஆம் ஆண்டிலும், 25 சதவீதமான வேலை நிறுத்தங்கள் வேலை இழப்பின் காரணமாகவும், 32 சதவீதமானவை தோட்ட விதிகள் வேலை ஒழுங்குகள் முதலியனவற்றின் காரணமாகவும், 10 சதவீதமானவை கூலி கொடுப்பதிற் சுணக்கம் காரணமாகவும், 15 சதவீதமானவை பொதுக் கோரிக்கைகள் காரணமாகவும் ஏற்பட்டன.